# கலைஞரும் நானும்

79

"முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கவனத்துக்கு நான் சென்றிருந்தேன் என்பதே என் திரை வாழ்க்கையில் எனக்குக் கிடைத்த பேறுகளில் ஒன்று" என கலைஞர் குறித்த தனது நினைவுகளைப் பகிர்கிறார் இயக்குநர் சீனு ராமசாமி.



## "என் படத் தலைப்புகளின் ஆசான் அவர்..!"

சீனு ராமசாமி, இயக்குநர்

"தி.மு. கழகம் என்கிற பேரியக்கத்தையும் கலைஞரையும் அறியாமல், அரசியல் ஆர்வத்தையும், இலக்கிய ஆர்வத்தையும் வளர்த்துக் கொள்ளமுடியுமா என்ன? அது இயல்பாகவே நிகழக் கூடியது. மதுரையில், தி.மு.க கூட்டங்கள் நடக்கும்போதெல்லாம் தமுக்கம் மைதானத்துக்கு தவறாமல் சென்றுவிடுவது, எனக்கும் எனது நண்பர்களுக்கும் பள்ளிக்காலத்தில் இருந்தே பழக்கமான ஒன்று. அந்த வகையில், கலைஞரின் பேச்சுகள்மீது அப்படி ஓர் ஈர்ப்பு.

திரைப்படம் குறித்த, துண்டுப் பிரசுரங்களை வீசிக் கொண்டுபோகும் வண்டிகளுக்குப் பின்னே ஓடிய காலத்தில், கலைஞரின் திரைப்பட வசனங்களை அச்சுப் பிசகாமல் மனப்பாடம் செய்வதும், அந்த மொழிநடையில் மயங்கியதும்தான் எனது திரைப்பட ஆர்வங்களின் தொடக்கமாக இருந்தன. நூல் வாசிப்பினைப் பழகிக் கொண்ட காலத்திலும் கலைஞரின் எழுத்துகள் ஈர்த்தன.

### கவனத்துக்குச் சென்றேன்

இப்படியான உந்துதல்களில் இருந்துதான் நான் திரைத்துறைக்கு வரநேர்ந்தது என்றால், மிகையில்லை. எனது திரைப்பிரவேசம் நிகழ்ந்து, படங்கள் செய்து கவனம் பெறத் தொடங்கிய காலத்தில், அவர் கவனத்துக்குச் சென்றதை நினைத்தால், இப்போதும் எனக்குப் பெருமையாக இருக்கும். யாருடைய எழுத்துகள், வசனங்களால் உந்தப்பட்டு, மொழி ஆர்வம், திரை ஆர்வத்தை வளர்த்துக் கொண்டேனோ, அவரது கவனத்துக்குச் சென்றது, மகிழ்ச்சியாக இருக்கும். எனது இரண்டாவது திரைப்படமான 'தென்மேற்கு பருவக்காற்று' படத்தின்போது அந்தச் சூழல் அமைந்தது.

2010-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் 'தென்மேற்கு பருவக் காற்று' திரைப்படம் வெளியானது. அப்போது தேர்தல் நெருங்கிக் கொண்டிருந்த நேரம் என்பதால், முதலமைச்சர் கலைஞர் அவர்கள் படம் பார்க்கும் வாய்ப்பு அமைந்திருக்குமா எனத் தெரியாது. அந்தப்படம் வெற்றிகரமாக ஓடிய நிலையில், அடுத்த சில மாதங்களில் ஆட்சி மாற்றம் நிகழ்ந்திருந்தது. அந்தச் சூழலில் படம் குறித்த நேர்காணலின் போது, 'உங்கள் படத்துக்குத் தலைப்பு எப்படிச் சூட்டுகிறீர்கள்?' எனக் கேட்டனர்.

"தலைப்பு என்பது ஒரு படத்திற்கான திலகம். பெண்ணின் முகத்தை அழகாகக் காட்ட குங்குமத்தை வைப்போம் அல்லவா, அது போலத்தான் படத்திற்கான தலைப்பும். இதில் முத்தமிழறிஞர் கலைஞர்தான் எனக்கு முன்னோடி. அவர் 'பராசக்தி' என்று ஒரு படத்திற்குப் பெயர் வைத்தார். அந்தப் படம் 'பராசக்தி'யைப் பற்றியதோ, பக்தியைப் பற்றியதோ அல்ல. அது ஒரு பகுத்தறிவுப் படம். சரியான வார்த்தையில் சொல்ல வேண்டுமென்றால், பர்மா அகதியைப் பற்றிய கதைதான் 'பராசக்தி'. அப்படி இருக்கையில், படத்திற்கு ஏன் 'பராசக்தி' என்று பெயர் வைத்தார்?

பகுத்தறிவு சம்பந்தப்பட்ட தலைப்பு வைத்தால், பக்தர்கள் நம் படத்தைப் பார்க்காமல் போய்விடுவார்கள் என்று நினைத்து 'பராசக்தி' எனப் பெயர் வைத்தார். அதன் மூலம், பெரிய அளவிலான கூட்டத்தைப் படம் பார்க்க வரவைத்து, அவர் சொல்ல நினைத்த கருத்தைச் சொன்னார். அதுபோலத்தான் என் படத்தின் தலைப்புகளும். எனது படத் தலைப்புகளின் ஆசான் அவர்தான்" என அந்தப் பேட்டியில் குறிப்பிட்டிருந்தேன்.



அந்தப் பேட்டி வந்த பத்திரிகையை எடுத்துக் கொண்டு, கோபாலபுரம் சென்று சண்முகநாதன் ஐயாவிடம் கொடுத்து, 'இதை கலைஞர் பார்வைக்குக் கொண்டு செல்லுங்கள்' எனக் கூறினேன்.

### பேட்டி, பார்த்து விட்டார்

அதன் பிறகு, ஒருநாள் சண்முகநாதன் ஐயா போன் செய்து, "தலைவர் உங்க பேட்டியைப் பார்த்துவிட்டார். படமும் பார்த்துவிட்டார். வாழ்த்துகள் சொல்லச் சொன்னார்' என்றதுடன், உங்கள் பேட்டியைக் குறிப்பிட்டு 'முரசொலி'யில் எழுத விரும்பினார். ஆனால், உங்கள் திரைவாழ்க்கைக்கு அது தொந்தரவாக அமைந்துவிடும் என்பதால், 'நேரம் வரும்போது குறிப்பிடுகிறேன்' என்று கூறினார்'' எனவும் தெரிவித்தார். ஒரு மாபெரும் தலைவர் போற்றுவதைக் கூட, போற்றுபவரின் சூழல் அறிந்து பக்குவமாகக் கையாண்டதை என்னவென்பது?

> **அந்த எழுத்துகள் அவர்பால் கொண்ட ஈர்ப்பிலிருந்து வந்தவை. என் போன்ற சிற்றுயிரும் அவர்பால் காதல் செய்யத் தூண்டிய துருவ ஈர்ப்பு அவர்.**

2011-ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட தேசிய திரைப்பட விருதுகளில் அந்தப் படத்துக்கு மூன்று தேசிய விருதுகள் கிடைத்தன. அப்படியான சூழலில் கவிப்பேரரசு வைரமுத்து அவர்களுடன் ஒருநாள் பேசுகையில், "கலைஞர் உங்களைப் பற்றி விசாரித்தார், நம்ம பையன் கலக்கி இருக்கிறாரே என்றதுடன், மண் சார்ந்த உணர்வோடு இருக்கிறார் என உயர்வாகப் பேசினார்" எனக் கூறினார். அந்தச் சொற்கள் எனக்கு உற்சாகம் அளிப்பவையாக இருந்தன.

ஆனால், நீண்ட இடைவெளிக்குப் பின்னர் அறிவிக்கப்பட்ட தமிழ்நாடு அரசு திரைப்பட விருதுகளில், 2010-ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு அரசு விருதுப் பட்டியலில் அந்தப் படம் புறக்கணிக்கப்பட்டது. அப்போது, தமிழ்நாடு அரசு மீது நான் வைத்த விமர்சனம் பரபரப்பாகப் பேசப்பட்டது. அதற்கு என்ன காரணமாக இருக்கும் என்பதை, நான் சொல்லத் தேவையில்லை. கலைஞர் அப்போதே சொன்னதுதான், என்பதை நினைத்துக் கொள்வேன்.

தமிழ்நாடு அரசு விருதுத் தேர்வுக்கு எதிராக, விமர்சனம் வைத்த நாட்களின்போது கலைஞர் அவர்களுக்கு உடல்நலம் சரியில்லாத காரணங்களால் நான் சந்திக்க முயற்சிக்கவில்லை. ஆனால், நான் சந்திக்க வாய்ப்பு அமையவில்லை என்றாலும், அவர் நெஞ்சில் நல்ல இடத்தில் இருந்தேன் என்பதை நினைத்துக் கொள்வேன்.

### கவிதைப் புகழஞ்சலி

அவர் இறுதி நாட்களில் அவ்வளவு மன அழுத்தத்துடன் இருந்தேன். நீண்ட நாட்களுக்குப் பின், அவருக்காக புகழஞ்சலிக் கவிதை எழுதினேன். "அவர்தான் கலைஞர் அற்புதச் செல்வர்" என அவர் புகழ் போற்றும் நீண்ட கவிதையை வீடியோவாகப் பதிவு செய்து வெளியிட்டேன். "பேச்சற்ற பாலகனின் முதல் சொல், கேள்வியாகப் பிறந்தது. பின், பராசக்தியிடம் தன் கேள்வியைத் திருப்பியது" என அவர் நிகழ்த்திய பண்பாட்டுப் புரட்சியுடன் அந்தக் கவிதாஞ்சலியை முடித்திருப்பேன்.

அந்த எழுத்துகள் அவர்பால் கொண்ட ஈர்ப்பிலிருந்து வந்தவை. என் போன்ற சிற்றுயிரும் அவர்பால் காதல் செய்யத் தூண்டிய துருவ ஈர்ப்பு அவர். அந்நாள் முதல் அவர் வளர்த்த தமிழ் வாழும் வரை அவர் வாழ்வார்!

....பகிர்வார்கள்

### வளரட்டும் 'பெரியார் விஷன்'!

'எல்லோருக்கும் எல்லாம்' என்கிற சமூகநீதிப் பாதையை தமிழ்நாட்டில் அழுத்தம் திருத்தமாக நிறுவிச் சென்றவர், தந்தை பெரியார். அந்தக் குரலை வளர்ந்து வரும் துறைகளுக்கும் நீட்டிக்க வேண்டியது காலத்தின் தேவை. அந்த வகையில் திரைத்துறையில் சமூகநீதி, முற்போக்குச் சிந்தனைகளைப் பேசும் படைப்புகளுக்குக் களம் அமைத்துத் தர உள்ளது 'பெரியார் விஷன்' OTT தளம்.




வர்த்தக ரீதியிலான OTT தளங்களில், சமூகநீதி பேசும் திரைப்படங்களுக்கு வாய்ப்புகள் மறுக்கப்படுவதுடன், பெரியாரியப் பார்வையில், மாற்று அரசியலைப் பேசும் திரைப்படங்களும் முற்றாகப் புறக்கணிக்கப்படுகின்றன. தவிர, அரசியல் ஆவணப்படங்கள், குறும்படங்களுக்கான ஒருங்கிணைந்த OTT தளம் இல்லை. இந்த இடைவெளியை குறைப்பதற்கான முயற்சியாக, 'பெரியார் விஷன்' OTT தளம் தொடங்கப்பட்ட உள்ளது.

இதன் தொடக்கவிழா, சென்னை, பெரியார் திடலில், உள்ள நடிகவேள் எம்.ஆர்.ராதா மன்றத்தில் இன்று நடைபெறுகிறது. திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் வீரமணி, கழகத் துணைப் பொதுச் செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி, நடிகர் சத்யராஜ் ஆகியோர் இதனைத் தொடங்கி வைக்க உள்ளனர்.

சமூகநீதிச் சிந்தனை கொண்டவர்களின் நீண்ட நாள் விருப்பமாக இருந்த முற்போக்கு OTT தளத்தின் தேவையை நிறைவேற்ற உள்ள பெரியார் விஷனுக்கு வாழ்த்துகள்!

### :.ப்ளாஷ்பேக்



மு.பெ.சாமிநாதன்



#### நாற்பது ஆண்டுகளைக் காட்டும் படம்!

1985-ஆம் ஆண்டு, திருப்பூர் மாவட்டத்தில் இளைஞர் அணி கட்டமைப்புப் பணிகளுக்காக சுற்றுப்பயணம் செய்தார் அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் இன்றைய கழகத் தலைவர் அவர்கள். அப்போது, முத்தூர் பகுதிக்கு வருகை தந்த அவரை, இளைஞர் அணியில் துடிப்புடன் பணியாற்றிக் கொண்டிருந்த நான் வரவேற்றதுடன், அவரது வழிகாட்டுதல்களைக் கொண்டு இளைஞர் அணிப் பணிகளை மேற்கொண்டோம். அப்போது, எடுக்கப்பட்ட இந்தப் படம், நாற்பது ஆண்டுகளுக்கு முன்னரான மறக்கமுடியாத வரலாற்றினை நினைவூட்டும்.

– மு.பெ.சாமிநாதன்,
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர்,
சென்னை.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

### கருவூலம்


#### அதிர வைத்த அண்ணா!!

1958-ஆம் ஆண்டு, சட்டமன்றத்தில் பேரறிஞர் அண்ணாவுக்கு எதிராக அவதூறு பரப்பப்பட்டது. அண்ணா இந்தியை ஏற்றுக்கொண்டு, கையெழுத்துப் போட்டுவிட்டார் என, அப்போதைய நிதி அமைச்சர் சி.சுப்பிரமணியம் கூறியதாக, பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன. அந்தச் செய்தி சட்டமன்றத்தில் எதிரொலித்தது. அதற்கு எதிராகப் பேசிய அண்ணா "இந்திக்கு எத்தனை அளவு எதிர்ப்பு இருக்கிறது, அதனை எவராவது ஆதரிக்க முனைகிறார்கள் என்று கூறினால், மக்கள் எத்தனை ஆத்திரம் கொள்கிறார்கள் என்பதை அறிந்து மகிழ்ந்தேன்'' என அளித்த விளக்கம், சட்டமன்றத்தை அதிரவைத்தது.

### திராவிடத்தால் வாழ்கிறோம்

545

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131